வணக்கம்

ஆல் இண்டியா ரேடியோ-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்—நாராயணசாமி

தேதி 23.3.2024 நேரம் மாலை 6.10 மணி

---------------------------------------------------------------------

தலைப்புச் செய்திகள்

2 நாள் அரசு முறைப் பயணமாக பூட்டான் சென்ற பிரதமர் திரு நரேந்திர மோடி, அங்கு பல்வேறு புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டார்.

ரஷ்ய தாக்குதலை கண்டித்து பிரதமர் திரு நரேந்திர மோடி சமூக ஊடகப் பதிவில் கண்டனம் தெரிவித்துள்ளார்.

புதுச்சேரி நாடாளுமன்றத் தொகுதிக்கான தேர்தல் நடைபெற உள்ள நிலையில் சில வழிகாட்டி நெறிமுறைகளை தேர்தல் ஆணையம் வெளியிட்டுள்ளது.

18 முதல் 19 வயதிற்கு உட்பட்ட 1 கோடியே 80 லட்சம் முதல் முறை வாக்காளர்கள் அடுத்த மக்களவை தேர்தலில் தங்கள் வாக்குரிமையை பயன்படுத்துவார்கள் என தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

பிரதமர்

2 நாள் பயணமாக பூட்டான் சென்ற பிரதமர் திரு நரேந்திர மோடி, இந்த பயணத்தின் போது இருநாடுகளுக்கும் இடையிலான பங்களிப்பையும், ஒத்துழைப்பையும் வலுப்படுத்துவதற்கான பல புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டார். இந்நிகழ்வில் பிரதமர் திரு நரேந்திர மோடி, பூட்டான் பிரதமர் ஷெரிங் தோக்கே மற்றும் அந்நாட்டு மன்னர் திரு ஜிக்மே கேசர் நாம்கேல் வாங்சுக் உள்ளிட்டோரை சந்தித்து பேச்சு வார்த்தை மேற்கொண்டார். இன்று காலை பூட்டானில் இந்திய அரசு உதவியுடன் கட்டப்பட்ட கியால்ட்சுன் ஜெட்சன் பெமா தாய் மற்றும் சேய் மருத்துவமனையை பிரதமர் திரு நரேந்திர மோடி அந்நாட்டு பிரதமருடன் சேர்ந்து திறந்து வைத்தார். 150 படுக்கைகள் கொண்ட இந்த மருத்துவமனையின் வளர்ச்சி 2 கட்டங்களில் இந்தியாவால் ஆதரிக்கப்பட்டது. முதல் கட்டமாக 22 கோடி ரூபாய் செலவில் 2019-ஆம் ஆண்டு கட்டப்பட்டு செயல்பட்டு வந்த நிலையில் 2-ஆம் கட்டத்தில் கட்டுமானப் பணிகள் நமது 12-ஆவது 5-ஆண்டு

திட்டத்தின் ஒருபகுதியாக 119 கோடி ரூபாய் செலவில் தற்போது நிறைவடைந்துள்ளது. இந்த மருத்துவமனை சுகாதாரப் பாதுகாப்பில் இந்தியா பூட்டான் கூட்டாண்மைக்கு ஒரு சிறந்த எடுத்துக் காட்டு என்று, மத்திய வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது. இதுகுறித்து பிரதமர் வெளியிட்டுள்ள சமூக ஊடகப் பதிவில் பூட்டான் பயணம் சிறப்பாக அமைந்தது என்றும் பூட்டான் மன்னர், பிரதமர் மற்றும் பிற புகழ்பெற்ற மக்களை சந்திக்கும் வாய்ப்பு அமைந்ததாகவும், இந்த பேச்சு வார்த்தை இந்தியா பூட்டான் நட்புறவுக்கு வலு சேர்க்கும் என்றும் மேலும் பூட்டான் மக்களின் அரவணைப்பு மற்றும் விருந்தோம்பலுக்கு நன்றி தெரிவித்துக் கொள்வதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

*ரஷ்யா தாக்குதல்*

ரஷ்ய தலைநகர் மாஸ்கோவில் இசை நிகழ்ச்சி நடைபெற்றுக் கொண்டிருந்த அரங்கில் பயங்கரவாதிகள் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 115-க்கும் மேற்பட்டோர் உயிர் இழந்திருக்கும் நிலையில் ஐஎஸ் பயங்கர வாத அமைப்பு இந்த தாக்குதலுக்கு பொறுப்பேற்றுள்ளது. இத்தாக்குதலைக் கண்டித்து

பிரதமர் திரு நரேந்திர மோடி, தனது சமூக ஊடகப் பதிவில் மாஸ்கோவில் நடந்த இந்த பயங்கரவாத தாக்குதலை வன்மையாக கண்டிப்பதாகவும், பாதிக்கப்பட்டோரின் குடும்பத்தினருக்காக பிராத்தனைகள் செய்வதாகவும் பதிவிட்டுள்ளார். ரஷ்ய அரசாங்கத்திற்கும், மக்களுக்கும் இத்துயர தருணத்தில் இந்தியா துணை நிற்பதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இந்த தீவிரவாத தாக்குதலுக்குப் பிறகு உயிரிழந்தவர்களுக்கு இரங்கல் தெரிவிக்கும் வகையில் டெல்லியில் உள்ள ரஷ்ய தூதரகத்தில் அந்நாட்டு தேசியக் கொடி அரைக் கம்பத்தில் பறக்க விடப்பட்டுள்ளது. இத்தாக்குதல் குறித்து ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் திரு அந்தோனியோ குட்டேரஸ் தனது அதிர்ச்சியையும், கண்டனத்தையும் தெரிவித்துள்ளார். இந்த பயங்கரமான தாக்குதலுக்கு காரணமானவர்களை கணக்கில் கொண்டு வருவதற்கு ரஷ்ய கூட்டமைப்பின் அரசாங்கத்துடன்

தீவிரமாக ஒத்துழைக்குமாறு அனைத்து மாநிலங்களுக்கும் ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புக் குழு அழைப்பு விடுத்துள்ளது. பாதிக்கப்பட்டவர்களுக்கும் அவர்களின் குடும்பத்தினருக்கும் பிரான்ஸ் தனது ஆதரவை வெளிப்படுத்துவதாக பிரான்ஸ் அதிபர் திரு இமானுவேல் மேக்ரான் தெரிவித்துள்ளார். மேலும் இதுஒரு வெறுக்கத்தக்க பயங்கரவாத செயல் என்றும் பாதிக்கப்பட்ட மக்களுக்கும் அவர்களின் குடும்பத்தினருக்கும் துணை நிற்பதாக இத்தாலிய பிரதமர் ஜார்ஜியா மெலோனி தெரிவித்துள்ளார்.

*ஜெய்சங்கர்*

மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் இன்று

3 நாள் பயணமாக சிங்கப்பூர் சென்றடைந்தார். நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் மற்றும் இந்திய தேசிய ராணுவ வீரர்களுக்கு மரியாதை செலுத்தி அவர் தமது பயணத்தை தொடங்கினார். இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள சமூக ஊடகப் பதிவில் சிங்கப்பூரில் உள்ள இந்திய தேசிய ராணுவ நினைவுச் சின்னம் நமது ஆழ்ந்த தேசப் பக்தியையும் யாருக்கும் அஞ்சாத

மனப்பான்மையும் வரும் தலைமுறையினருக்கு உத்வேகம் அளிப்பதாக தெரிவித்துள்ளார்.

தேர்தல்

புதுச்சேரி நாடாளுமன்றத் தொகுதிக்கான தேர்தல் எதிர் வரும் 2024-ஆம் ஆண்டு ஏப்ரல் 19-ஆம் தேதி நடைபெற உள்ள நிலையில் சில வழிகாட்டி நெறிமுறைகளை தேர்தல் ஆணையம் வகுத்துள்ளது. அதன்படி அரசியல் கட்சிகள் மற்றும் வேட்பாளர்கள் தங்களின் பிரச்சாரங்களின் போது மற்றவர்களின் மனம் புண்படும்படியோ, அல்லது மத, இன, மொழி ரீதியிலான பிளவுகளை ஏற்படுத்தும் வகையிலோ பிரச்சாரங்களை அமைத்துக் கொள்ளக் கூடாது என அறிவுறுத்தி உள்ளது. அரசியல் கட்சிகள் மற்றும் வேட்பாளர்கள் எலக்ட்ரானிக் மீடியா, திரையரங்குகள் மற்றும் சமூக ஊடகங்களின் வாயிலாக மேற்கொள்ளும் விளம்பரங்கள் மற்றும் காணொளி காட்சிகளை முன்கூட்டியே தேர்தல் துறையிடம் உரிய அனுமதி பெற்றப் பிறகு வெளியிட வேண்டும் என உத்தரவிட்டுள்ளது.

தேர்தல் ஆணையத்தின் வழிகாட்டுதலின் படி, புதுச்சேரி தேர்தல் துறை மாவட்ட அளவிலான குழுக்களையும் மற்றும் மாநில அளவிலான குழுவினையும் அமைத்துள்ளது. புதுச்சேரி மாவட்ட ஆட்சியர் மற்றும் மாவட்ட தேர்தல் அதிகாரியின் தலைமையில் புதுச்சேரி மாவட்டத்திற்கு ஒரு குழுவும் காரைக்கால் மாவட்டத்திற்கு என அந்த மாவட்ட ஆட்சியரின் தலைமையில் மற்றொரு குழுவும் அமைக்கப்பட்டுள்ளது. எலக்ட்ரானிக் மீடியா, சமூக ஊடகங்கள், திரையரங்குகள் மற்றும் காணொளி காட்சிகளை வெளியிட விரும்பும் அரசியல் கட்சிகள் மற்றும் வேட்பாளர்கள் மாவட்ட அளவிலான இந்த குழுக்களிடம் தங்களது விளம்பரங்களை 3 நாட்களுக்கு முன்னதாக சமர்ப்பித்து உரிய சான்றிதழை பெற வேண்டும். ஒன்றுக்கும் மேற்பட்ட மாவட்டங்களில் அல்லது மாநில அளவில் வெளியிடப்படும் விளம்பரங்கள் மற்றும் காணொளி காட்சிகளை அந்தந்த மாவட்ட குழுக்களிடம் சமர்ப்பிக்க வேண்டும். சமர்ப்பிக்கப்பட்ட விளம்பரங்கள் மற்றும் காணொளி காட்சிகளுக்கான சான்றிதழ் மறுக்கப்பட்டாலோ அல்லது மாற்றம் செய்யப்பட்டாலோ அந்த

முடிவினை எதிர்த்து 48 மணி நேரத்திற்குள் தேர்தல் அதிகாரி தலைமையிலான குழுவிடம் மேல்முறையீடு செய்து கொள்ளலாம்.

*முதல் முறை வாக்காளர்*

18 முதல் 19 வயதிற்கு உட்பட்ட 1 கோடியே 80 லட்சம் முதல் முறை வாக்காளர்கள் அடுத்த மக்களவை தேர்தலில் தங்கள் வாக்குரிமையை பயன்படுத்துவார்கள். இளம் மற்றும் முதல் முறை வாக்காளர்களை ஊக்குவிக்க I VOTE 4 SURE போன்ற பல சமூக ஊடக பிரச்சாரங்கள் நடந்து வருகின்றன. இதுவரை 17 வயதிற்கு மேற்பட்டவர்களிடம் இருந்து

13. 4 லட்சத்திற்கும் அதிகமான விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது. மேலும் 19 கோடியே 74 லட்சம் வாக்காளர்கள் 20 முதல் 29 வயதிற்கு உட்பட்டவர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. தேர்தல் எனும் ஜனநாயக திருவிழாவில் இளைஞர்களின் பங்கேற்பை அதிகரிக்க தேசத்தின் அடையாளங்களான சச்சின்

டெண்டுல்கர் மற்றும் ராஜ்குமார் ராவ் ஆகியோருடன் தேர்தல் ஆணையம் செயல்படுகிறது. மேலும் சமூக ஊடகப் பிரச்சாரங்கள் மற்றும் வானொலி ஈடுபாடு ஆகியவை பங்கேற்பை அதிகரிப்பதை நோக்கமாக கொண்டுள்ளன. இளைஞர்கள் பங்கேற்பதில் உள்ள தடைகளை நிவர்த்தி செய்வதற்காக வாக்குப் பதிவு அமலாக்க திட்டத்தை தேர்தல் ஆணையம் செயல்படுத்தி வருகிறது.

கப்பல்

அரேபிய கடல் மற்றும் இந்தியப் பெருங்கடல் பகுதியில் கடல் சார் பாதுகாப்பு நடவடிக்கையான Operation Sangalp தொடங்கப்பட்டு 100 நாட்கள் இன்றுடன் நிறைவடைகிறது. கடந்த 100 நாட்களில் பல்வேறு அச்சுறுத்தல்களில் இருந்து பாதுகாப்பதற்கு உறுதியான ஆதரவை வெளிப்படுத்தி உள்ளது. இந்த அமைப்பின் கீழ் நடந்து வரும் கடல் சார் பாதுகாப்பு நடவடிக்கைகளின் முன்னேற்றத்தின் போது இந்திய கடற்படை வெளிப்படுத்திய அளவீடு செய்யப்பட்டதில் இந்தியாவின் கடல்சார் நலன்களை பாதுகாப்பதிலும், அச்சுறுத்தல்களை

எதிர்கொள்வதிலும், முறியடிப்பதிலும் உருவாக்கப்பட்ட விளைவுகளால் சர்வதேச பாராட்டைப் பெற்றுள்ளது.

*தியாக தினம்*

பகத்சிங், சுக்தேவ் மற்றும் ராஜ்குரு ஆகியோரை 1931-ஆம் ஆண்டு இதே நாளில் தூக்கிலிடப்பட்டதை நினைவு கூர்ந்து அவர்களின் தியாகத்தைப் போற்றும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 23-ஆம் தேதி ஷஹீத் திவாஸ் என்னும் தியாக தினம் அனுசரிக்கப்படுகிறது. இம்மூவரின் ஈடு இணையற்ற வீரத்தையும், அவர்கள் செய்த தியாகத்தையும் நாடு எப்பொழுதும் நினைவில் கொள்ளும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி சமூக ஊடகப் பதிவில் தெரிவித்துள்ளார். பஞ்சாப் உட்பட நாடு முழுவதும் இந்த தியாகிகளுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டு வருகிறது.

*வானிலை*

தமிழகம், புதுச்சேரி மற்றும் காரைக்கால் ஆகிய பகுதிகளில் இன்று முதல் வரும் 29-ஆம் தேதி வரை வறண்ட வானிலை நிலவக் கூடும். தமிழகத்தில் ஓரிரு இடங்களில் அதிகபட்ச

வெப்பநிலை படிப்படியாக 2 முதல் 3 டிகிரி செல்சியஸ் அதிகரிக்க கூடும். மேலும் இன்று மற்றும் நாளை அதிக வெப்பநிலை மற்றும் அதிக ஈரப்பதம் இருக்கும் பொழுது அசௌகரியம் ஏற்படலாம் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

பேட்மிண்டன்

சுவிஸ் ஓப்பன் பேட்மிண்டன் போட்டியின் ஆடவர் ஒற்றையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் இந்தியாவின் கிடாம்பி ஸ்ரீகாந்த்-தாய்வானின் சியா ஹோலியை இன்று எதிர்கொள்கிறார். மேலும் மகளிர் இரட்டையர் காலிறுதியில் ட்ரீஷா ஜாலி, காயத்ரி கோபி சந்த் இணை, ஆஸ்திரேலிய இணையை இன்று எதிர் கொள்கிறது.

கிரிக்கெட்

ஐபிஎல் கிரிக்கெட் தொடரின் சண்டிகரில் நடைபெற்று வரும் ஆட்டத்தில் டாஸ் வென்ற பஞ்சாப் அணி பந்து வீச்சை தேர்வு செய்துள்ளது. முதலில் ஆட பணிக்கப்பட்ட டெல்லி அணி 9 விக்கெட் இழப்பிற்கு 174 ரன் எடுத்திருந்த நிலையில் 175 ரன்கள் என்ற இலக்கை கொண்டு தொடர்ந்து ஆடி வரும் பஞ்சாப்

அணி சற்று முன் வரை --------- ஓவர்களில் -------விக்கெட் இழப்பிற்கு,---------- ரன்கள் எடுத்தது. இன்று இரவு 7.30 மணிக்கு கொல்கத்தாவில் நடைபெறும் மற்றொரு ஆட்டத்தில் கொல்கத்தா அணி ஐதராபாத் அணியை எதிர்கொள்கிறது. நேற்று நடந்த தொடக்க ஆட்டத்தில் நடப்பு சாம்பியனான சென்னை சூப்பர் கிங்ஸ் அணி 6 விக்கெட் வித்தியாசத்தில் பெங்களூர் அணியை வீழ்த்தியது.

மீண்டும் தலைப்புச் செய்திகள்

2 நாள் அரசு முறைப் பயணமாக பூட்டான் சென்ற பிரதமர் திரு நரேந்திர மோடி, அங்கு பல்வேறு புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டார்.

ரஷ்ய தாக்குதலை கண்டித்து பிரதமர் திரு நரேந்திர மோடி சமூக ஊடகப் பதிவில் கண்டனம் தெரிவித்துள்ளார்.

புதுச்சேரி நாடாளுமன்றத் தொகுதிக்கான தேர்தல் நடைபெற உள்ள நிலையில் சில வழிகாட்டி நெறிமுறைகளை தேர்தல் ஆணையம் வெளியிட்டுள்ளது.

18 முதல் 19 வயதிற்கு உட்பட்ட 1 கோடியே 80 லட்சம் முதல் முறை வாக்காளர்கள் அடுத்த மக்களவை தேர்தலில் தங்கள் வாக்குரிமையை பயன்படுத்துவார்கள் என தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது.

Puducherry/Reg.Bulletin/Tamil/18.10hrs/ 23.3.2024/Script.

--------------------